இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
மட்டம் 4
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை 1 – 2022/2023
LLU4707 குடும்ப சட்டம்
நேரம்- 1 மணித்தியாலம்

---

திகதி - 25 செப்டம்பர் 2023 | நேரம்- மு.ப 9.30 – மு.ப 10.30

---

வினாக்களின் மொத்த எண்ணிக்கை (02)இரண்டு

ஒரு (01) வினாவுக்கு மட்டும் விடை எழுதவும்.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

**நீங்கள் தெரிவு செய்த கேள்விக்கான விடைகளை தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் சட்டப்பூர்வ விதிகளை குறிப்பிட்டு ஆராய வேண்டியது அவசியம் என்பதை நினைவில் கொள்ளவும்.**

1. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட கஜதீபன், மட்டக்களப்பில் வசித்த மீனாட்சியை காதலித்தான். கஜதீபனும் மீனாட்சியும் ஒரே சாதியை சேர்ந்தவர்களல்ல என்பதால், கஜதீபனின் பெற்றோர் அவர்களது உறவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதன்பின்னர் கஜதீபன் மட்டக்களப்புக்குச் சென்று தொழில் ஒன்றை ஆரம்பித்தான். அவனுடன் வந்த மீனாட்சி அவனது தொழிலுக்கு உதவி செய்தாள். வியாபாரம் வெற்றிகரமாக மாறியது, அவர்கள் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். 2019 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் மீனாட்சியின் இல்லத்தில் தாலி கட்டும் நிகழ்வை நடத்தினர். திருமணதின் பின்னர் மட்டக்களப்பில் கணவன் மனைவியாக வாழந்தனர். 2020ல் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். ஆனால், மீனாட்சியின் தோழி ஒருவர் மீனாட்சியிடம் கஜதீபனுக்கும் மீனாட்சிக்கும இடையேயான திருமணம் வலிதற்றது, ஏனெனில் அது பதிவு செய்யப்படவில்லை என்று கூறியுள்ளார். உண்மைகளை அடிப்படையாக கொண்டு பின்வருவனவற்றின் சட்டப்பூர்வ ஏற்புடைமை பற்றி விவாதிக்கவும்.

(i) கஜதீபனும் மீனாட்சியும் தங்கள் திருமணத்தின் சட்டப்பூர்வ ஏற்புடைமையை அறிய விரும்புகிறார்கள்.

(15 புள்ளிகள்)

(ii) சகல தரப்பினரும் கண்டியைச் சேர்ந்தவர்களாக இருந்திருந்தால் உங்கள் விடை வேறுபட்டிருக்குமா?

(05 புள்ளிகள்)

2. "இலங்கைச் சட்டத்தில், ஒரு ஆணும் பெண்ணும் கணவன்-மனைவியாக இணைந்து வாழ்வதன் மூலம் திருமணத்தை சட்டப்பூர்வமாக்கிக் கொள்வதற்கான ஒரு அனுமானமாக, சகவாழவு மற்றும் நன்மதிப்பு செயன்முறை கருதப்படுகிறது"

மேற்கண்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? மேலே உள்ள அறிக்கையை நுணுக்கமாக ஆராய்ந்து விவாதித்து, தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் உங்கள் வாதத்தை ஆதரிக்கவும்.

(20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*